# பக்திக்கோர் பாவை புனிதவதி

**முனைவர் கி. சுந்தரராஜ்**
**துறைத்தலைவர், தமிழ்த்துறை,**
**எஸ்ஆர்எம் கலை அறிவியல் கல்லூரி, காட்டாங்குளத்தூர்,**
**செங்கல்பட்டு மாவட்டம்– 603203. krishnansundararaj@gmail.com**

51

**ஆய்வுச்சுருக்கம்**

முன்னுரை, அம்மையார் வாழ்வு இடம் பெறும் நூல் சிறப்பு, பாவையின் பக்தி மாண்பு, கொள்கை மறவர், சிவனடியார் தொண்டு, அதிசயம் நிகழ்தல் ஆய்வின் முடிவுகள் ஆகியத் தலைப்புகளின்வழி இக்கட்டுரை கட்டமைக்கப்பட்டுள்ளது.

புனிதவதி எனும் இயற்பெயர்கொண்டு 'தலையால் நடந்த பதி' என்றும் இறைவன் சிவபெருமானே அம்மையே என்று அழைக்கப்பெற்றமையாலும் காரைக்காலில் பிறந்தமையாலும் 'காரைக்காலம்மையார்' என்றும் பக்தி உலகிற்கு பெருமை சேர்த்தவர் இவர்.

சைவ சமயத்தின் முன்னோடி, சைவ பெண்ணடியார் மூவருள் முதன்மையர்; சிவனருள் பெற்று வீடுபேறு பெற்ற பெருந்தகையள்; காரைக்காலில் கோயில் கொண்டு வழிபடும் தெய்வமாகக் காட்சியளிப்பவள். அதோடு மாங்கனி விழா, பக்திக்கோர் விழா என்பதனை உலகிற்கு உணர்த்திக் கொண்டிருக்கும் ஒப்புயர்வற்ற சிவதொண்டர்; பிறப்பு முதல் பிறவாமை வேண்டியது வரை சிவனடியின் கீழிருக்கும் சீர்தொண்டர் இவர்; அந்தாதி இலக்கிய வகைமையினைத் தமிழுக்கு யாத்துத் தந்தவர், பெண்களால் இல்லறவாழ்வு துறந்து இறைநெறியில் பக்தி செலுத்தி முக்கியும் அடைய முடியுமென உலகிற்கு உணர்த்தியவர்

ஆகியன காரைக்காலம்மையார் வாழ்வினூடாக வெளிப்படுத்துகிற வகையில் இக்கட்டுரை அமையும்.

**முன்னுரை**

சைவசமயத்தின் முன்னோடி; இசைத் தமிழின் அன்னை; தலையால் நடந்த பதி, இறைவன் அம்மையே என்றழைத்த சிறப்புக்குரியவர் என்றெல்லாம் பேசப்பெறும் பெருமைக்குரியவர். காரைக்காலில் பிறந்தவர், நாயன்மார்களுள் நயத்தக்க மாண்புடையவர்.

சுந்தரமூர்த்தி நாயனார் தம் திருத்தொண்டர் தொகையில் 'பேயார்' என்கிறார். அம்மையாரே தமது அற்புதத்திருவந்தாதியின் இறுதிப்பாடலில் 'காரைக்கால் பேய்' என்று குறிப்பிடுகின்றார். தமது இளமை வடிவத்திலிருந்து பேய்வடிவம் பெற்ற பின் பாடியதாக இடம் பெற்றுள்ள நூல். தேவாரம் பாடுங்காலத்திற்கு முன்பே இசைத்தமிழால் சிவனைப் பாடியவர். இறைவனைப் பதிகம் எனும் முறையில் பாடியதால் திருப்பதிகம் எனப்பட்டது. இறைவன் ஆடியதைப் பாடியதால் திருவாலங்காட்டு மூத்தத்திருப்பதிகம் எனவும் அழைக்கப்படுகின்றது. அம்மையாரால் 'அந்தாதி' எனும் இலக்கிய

வகைமையில் பாடப்பெற்ற முதல் நூல் அற்புதத் திருவந்தாதி. என்பதும் குறிப்பிடத்தக்கது. இறைவனின் அற்புதத்தைப் பாடியதால் 'அற்புதத் திருவந்தாதி' என மொழியும் பெயர்ப் பெற்றது. புதுவை மாநிலத்தில் காரைக்காலில் அம்மையார் மூலவராகக் கொண்ட தனிக்கோயிலாகக் கொண்டு அமைந்துள்ளது இவரின் தனிச்சிறப்பு. புனிதவதியார் இளமையான தோற்றத்துடன் காணப்படும் கோயில் இதுவாம். கோயிலின் சுற்றுச் சுவரில் இவரது வாழ்வு குறித்த வரலாறு பதிக்கப் பெற்றுள்ளது. அதுமட்டுமின்றி 'மாங்கனித் திருவிழா' என்றொரு விழா ஆண்டுதோறும் ஆனி மாதம் பௌர்நமி நாளன்று வெகுசிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இத்திருவிழாவின் பொழுது அம்மையார் வீதியுலா வருகையில் மாங்கனிகளைச் சமர்ப்பித்து வழிபடும் வழக்கம் இன்றும் நிகழ்ந்து கொண்டு வருவது கண்கூடு. தமிழ்மொழிக்குப் புத்தம் புதிய இலக்கிய வகைமையான அந்தாதி, மாலை எனும் சிற்றிலக்கிய வகைமைகளைத் தொடங்கி வைத்தவர் தமிழ்த் தொண்டு புரிந்தமையால் இவரது புலமை சிறப்பு மிளிர்கின்றது.

**அம்மையார் வாழ்வு இடம் பெறும் நூல் சிறப்பு**

பதினொன்று அல்லது பனிரெண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவராக கருதப்படும் சேக்கிழார் சைவசமய சிவனடியார்களின் பெருமைகளையும் அவர்தம் வாழ்வியல் வரலாற்றையும் எடுத்தியம்பும் நோக்கோடு சுந்தரமூர்த்தி நாயனார் இயற்றிய திருத்தொண்டர்த் தொகை' மற்றும் நம்மியாண்டார் நம்பி அவர்கள் இயற்றிய திருத்தொண்டர் திருவந்தாதி ஆகிய நூல்களை மூலநூலாகக் கொண்டு திருத்தொண்டர் புராணம் எனும் பெயரிட்டு எழுத, பின்பு சேக்கிழாரால் இயற்றப்பட்டதால் சேக்கிழாரின் பெரிய புராணம் என வழங்கப் பட்டது. திருமலைச்சருக்கம் முதல் வெள்ளானைச் சருக்கம் வரையிலான 13 சருக்கங்களையும், இரண்டு காண்டங்களையும் கொண்ட இந்நூலில் காரைக்காலம்மையார் வரலாறும் நாயன்மார்கள் வரிசையில் வைத்துப்பாடப் பெற்ற பேறு பெற்ற சைவ சமயத்தின் முன்னோடி என்றழைக்கப் பெறுவதும் இவ்வம்மையாரே

''சைவத் திருமுறைகளில் முதலில் இடம்பெற வேண்டிய கால்த்தால் முற்பட்ட அம்மையின் திருப்பாடல்கள் 11வது திருமுறையில் ஏன் சேர்த்தனர் என்பது தெரியவில்லை. வைரம் எங்கிருப்பினும் வைரம் வைரம் தானே'' *(காரைக்காலம்மையா ர்வாழ்வும் இலக்கியமும் நூல் முன்னுரையிலிருந்து***)**
''5ஆம் நூற்றாண்டில் தோன்றனிய அம்மையார் ஆன்மிக உணர்வைப் பிறப்பிலேயே பெற்றிருந்தாலும் சிறப்புற்றதெல்லாம் இறைவாழ்வினை ஏற்ற பிறகு தான். கணவன் கடவுளின் மாட்சியை மனைவியிடம் கண்ணாரக் கண்டதும் கணவனைத் தொழுகின்ற வளைக் கணவனால் தொழப்பெறுகின்ற நிலையைக் கண்டதும் துறக்கப்பட்டதும் துறவியானார். உடம்பெடுத்த தன் பயனே உள்ளம் உரை செயல் கடந்த வனைக் காணவே எனத் திடங் கொண்டார்'' *(காரைக்காலம்மையார் வாழ்வும் இலக்கியமும் நூல் முன்னுரையிலிருந்து)*

**பாவையின் பக்தி மாண்பு**

பிறந்து கருத்துத் தெரிந்த நாள் முதலாய் இறைவனின் சேவடி பற்றி தொழுத பேற்றினைப்

'பிறந்து மொழி பயின்ற பின்னெல்லாம் காதல்

சிறந்து நின் சேவடியே சேர்ந்தேன் - நிறந்திகழும்
மைஞ்ஞான்ற கண்டத்துவானோர் பெருமானே
எஞ்ஞான்று தீர்ப்ப திடர்'

என்று பாடிடும் இவர், 'சுடர் உரு'வில் இருப்பதாய் இறைவனைக் காணும் அம்மையார்,

'நெக்குநெக்கு நினைப்பவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும் பொன்னார் சடைப் புண்ணியன்
பொக்க மிக்கவர் பூவு நீருங்கண்டு
நக்கு நிற்பர் அவர் தம்மை நாணியே' (திருநாவுக்கரசர், பாடல்-9),

என்று நெகிழ்ந்து நெகிழ்ந்து நினைப்பவர் நெச்சிக்குள்ளே புகுந்து நிற்கும் பொன்னார் சடைப்புண்ணியன் பொய்மையாளர் பூசையில் பூவையும் நீரையும் கண்டு அவர் தம்மை நாணி இரந்து நிற்பன் என்கின்ற நாவுக்கரசரின் பக்தி சிறப்பு இறைவனை நெஞ்சுக்குள் வைத்து, கண்களால் கண்டு இறைவனை இறைஞ்சும் தன்மையினும்,

'இந்தப் பிறவி மட்டு மன்று. எழுகின்ற பிறவிகளெல்லாம்
இறைவனுக்கே என்றும் ஆளாவோம் அன்பால்'

என மொழிவதனால் அம்மையாரின் பக்தி மாண்பு பிறவியென்று உண்டென்றால் அது இறைவனுக்கானதாக அமைய வேண்டுமெனும் பேரவா கொண்டிருந்த பெருமை அவருடையது என்பது,

'அவர்க்கே எழுபிறப்பும் ஆளாவோம் என்றும்
அவர்க்கே நாம் அன்பாவதல்லால்' (அற்புதத் திருவந்தாதி, பாடல்-3) எனும்

அவர் பாவடிகளில் அறியலாகிறது.

'முடியேன் இனிக்கிற வேண்பெறின்
மூவேன் பெற்றம் ஊர்தீ
கொடியேன் பல பொய்யே உணரப்
போனக்குக் கொள் நீ
செடியார் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்
நல்லூர்ருட்டுறடையுள்
அடிகேள் உனக்காளாய் இனி
அல்லேன் எனலாமே' எனச் (சுந்தரர்-தேவாரம், பாடல்-4)

திருவெண்ணெய் நல்லூரில் உறையும் தலைவனே! உனக்கு அடியவனாயிருந்து நான் இறக்கவும், மீளப் பிறந்து இவ்வுலகினில் வாழப்பெறின் மூப்படைந்து வருத்தவும் ஆற்றேனாகினேன். எனைவெறுக்காது ஏற்றருள் என்று சுந்தரர் பாடுவதினும், இறைவனே எனக்கு இனிபிறப்பு வேண்டாம் எனமுறையிடுவதும், ஒருவேளை பிறவிவாய்த்தால் உன்னை மறவாது இருத்தலும், உன்புகழ் பாடிக்கொண்டே உன்னடியின்கீழ் இருக்கவுமான வரம் எனக்கருள்வாய் இறைவா! என்றிறைஞ்சி,

இறவா இன்பன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
’பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உனை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டு நான் மகிழ்ந்து பாடி
அறவா! நீஆடும் போதுன் அடியின்கீழ் இருக்க’ (பாடல் 59).

என்றும் மொழிகின்றார். எனவே, உள்ளத்தில் மட்டும் அன்பு கொள்ளாமல், எழுகின்ற பிறவிதோறும் இறைவன் திருவடி நிழலின்கீழ் இருக்கும் பேற்றினை வேண்டி பெற்றவர் காரைக்காலம்மையார் என்பதன் வழி பாவையின் பக்தி மாண்பு இவண் நோக்கத்தக்கது.

‘’இறை வழிப்பாட்டில் எத்தனையோ வகை உண்டு அவற்றுள் தாயன்பு என்பது மிகமிக மேலான ஒன்று அந்த அன்புறவைப் பெற்றவர் அம்மையார்’’ *(காரைக்காலம்மையார் வாழ்வும் இலக்கியமும் நூல் முன்னுரையிலிருந்து)*

**கொள்கை மறவர்**

தான் கொண்ட கொள்கையில் இம்மியளவும் மாறாது வாழ்ந்தவர் காரைக்காலம்மையார். இல்லறத்திலிருந்து கொண்டு சிவனடியார்களைப் போற்றித் துதிப்பதும், கணவன் தன்னிடமிருந்து விலகியது அறிந்தவுடன், கணவனுக்காகத் தாங்கிய இவ்வுடல் வனப்பு நீங்கி பேய் வடிவம் வேண்டி பெற்று இறைவன் திருவடிக்கே எனும் பேற்றினைப் பெற்றவராக விளங்கியவர் இவர் என்பதனை,

’ஈங்கிவன் குறித்த கொள்கை இது இனி இவனுக்காகத்
தாங்கிய வனப்பு நின்ற தசைப்பொதி கழித்திங் குன்பால்
ஆங்கு நின்தாள்கள் போற்றும் பேய் வடிவடியேனுக்குப்
பாங்குற வேண்டும்’ (பாடல் 48.)

எனும் அடிகளால் அறியலாகின்றது.

**சிவனடியார் தொண்டு**

சைவ சமயத்தில் இறைவனை வணங்குவதினும் இறைபக்தர்களின் தொண்டு மிகவும் போற்ற தக்க வகையில் அமைந்திருந்தது என்பதனை, **‘சிவனடியாருக்குச் செய்யும் தொண்டே சிவனுக்குச் செய்யும் தொண்டு’** என்பதன் வழி அறியலாம். சிவனடியாரைப் போற்றித் துதிப்பதன்வழி சிவனருள் பெற இயலும் என்பதும் சிவனுக்கே செய்யும் தொண்டு என்பதும் அக்கூற்றினை மெய்பிக்கின்ற வகையில் தம் வாழ்வில் வாழ்ந்து நிறுவியவர் அம்மையார்,

சிவனடியாரைக் கண்ட மாத்திரத்திலே சிவபெருமானைக் கண்டதாகக் கருதி அவருக்கு குறிப்பறிந்து அவர் வேண்டுவன செய்துவதோடு அவரருள் பெறுவது பரமனிடம் பெறும் அருளாகக் கருதுகின்றமை சைவசமயத்தின் நெறியாகக் கொள்ளப்பட்டது. அவ்வகையில் அம்மையாரும் அடியவர் ஒருவரின் அருள் பெற்ற மாண்பினைப் போற்றுகின்றது அவர் வாழ்வு.

சிவதொண்டர் ஒருவர் தம் இல்லத்திற்கு அதீத பசிவேட்கையால் வருகைத் தருவதைப்
‘பண அரவம் புனைந்தருளும் பரமனார் திருத்தொண்டர்
உணவின் மிகுவேட்கையினால் ஒருவர் மனையுட் புகுந்தார்’, என்பதை,

வேதங்களை மொழிந்த பிரானாகிய சிவபெருமானின் உண்மைத் தொண்டர் தன்இல்லத்திதற்கு வருகைத் தருவதும், அவர் மிகுந்த பசியில் வந்துள்ளதனைக் குறிப்பாலறிந்து அவர் பாதங்களை நீரால் கழுவி, இல்லம் அழைத்து அமர்த்தி, இனிது விரும்பி உண்ணுமாறு அவர்க்குணவளித்து விருந்தளித்த பாங்கினை,

'வேதங்கள் மொழிந்த பிரான் மெய்த்தொண்டர் நிலை கண்டு
நாதன் தன் அடி அடியார்ப் பசிதீர்ப்பேன் என நண்ணிப்
பாதங்கள் விளக்க நீர்முன்னளித்துப் பரிகலம் வைத்
தேதந்தீர் நல்வருந்தா இன்னடிசில் ஊட்டுவார்' *(காரைக்காலம்மையார் புராணம்; பாடல் எண். 17)*

சிவனே தம்மில்லம் வந்திருப்பதாய்க் கருதி, இதனினும் பெறற்கரிய பேறு வேறொன்றும் உண்டோ? எனக்கருதி, உணவு வழங்கும் முறைமையை,

வெளி மலர் மேல் திருவனையார் விடையவன் தன் அடியாரே
பெறலரிய விருந்தானால் பேறிதன்மேல் இல்லை யெனும்
அறிவினராய் அவரமுது செய்வதனுக்காதரிப்பார்' *(காரைக்காலம்மையார் புராணம்; பாடல் எண்.)*

அடியார்க்கு உள்ளன்போடு வழங்கிய உணவினை இனிது மகிழ்ந்து வயிறார உண்டு மகிழ்ந்து சென்றார் அவர். வீட்டிற்கு வருவோரை முகமலர்ச்சியுடனும் இன்முகத்துடனும் வரவேற்று, குறிப்பறிந்து உபசரித்து வழியனுப்புவது இல்லறக் கடமைகளுள் ஒன்று. அதனை இம்மியும் பிசகாது மேற்கொள்ளும் பண்புடை மாந்தராக அம்மையார் செயல் இருந்திருப்பது இப்பாடல்வழி அறியலாகிறது. அதுவும் தான் மேற்கொண்ட பக்தி பெருக்கால் அப்பக்தி மாண்பினை வெளிப்படுத்துகின்ற வகையில் சிவனடியாரே விருந்தினராக வந்திருந்து விருந்துண்டு சென்றது 'நல்லது நினைக்கின் நல்லது நடக்கும்' என்றமொழிக் கொப்ப நிகழ்ந்தது வியப்பினும் வியப்பே எனலாம்.

**அதிசயம் நிகழ்தல்**

நாம் ஒன்றினைப் பற்றுக்கோடாக எண்ணி வாழ்வில் கொள்கைப் பிடிப்புடன் வாழ்வோமாயின் எதுவும் கைகூடும் என்பதும், நம்பிக்கை ஒருபோதும் நம்மைகை விடாது வெற்றியினை ஈட்டும் என்பதும் அம்மையார் வாழ்வு நமக்குக் காட்டுவன. அவ்வகையில், 'நம்பினோர் கைவிடப்படார் இது நான்கு மறை தீர்ப்பு' எனும் மொழிக் கொப்ப, கணவனால் கொண்டு வரப்பட்ட மாங்கனி ஒன்றினை அடியவர்க்கு ஈந்த நிலையில், கணவனுக்குப் படைத்த கனியின் சுவை மிகுந்திருந்தமையினால், மற்றொரு மாங்கனியைத் கொண்டு வருமாறு கேட்க, கொண்டு வருபவர் போல செய்வதறியாது இறைவன் திருவடி முன் சரண்புக, இறைவன் அருளால் அவர்கையில் மாங்கனி ஒன்று பொருந்தியது. அதனைக் கொணர்ந்து கணவனிடம் வழங்க, அதனை உண்ட கணவன் இது தேவலோகத்திலும் கிடைத்தற்கரிய கனி, இதனைப் பெற்றது எவ்வாறு? என வினவ, நிகழ்ந்ததைக் கணவனிடம் ஒளிக்காது கூற, வியந்து நோக்கி அவரைக் கடவுளாய்க் கண்டனன். என்பதனை,

மெய்ம் மறந்து நினைந்துற்ற விடத்துதவும் விடையவர் தாள்

தம்மனங் கொண்டுணர்தலுமே அவர்ரருளால் தாழ்குழலார்

கைம்மருங்கு வந்திருத்தி மதுரக் கனியொன்று'

இது தான்

முற்றரு மாங்கனி யன்று மூவுலகில் பெற்றெகரிதால்

பெற்றது வேறெங்'கென்று, *(காரைக்காலம்மையார் புராணம், பாடல் - 25)*

என வினவுகிறார். இப்போது இன்னொரு மாங்கனியை எனக்கு அருளாயின், முன்னே நான் சொன்ன சொல் பொய்யாகும்.

'ஈங்கிதளித் தருளீரேல் என்னுரை பொய்யாம்'

எனவேண்ட, அவரின் வேண்டுகோளைச் செவிசாய்த்த பெருமான் இன்னொரு மாங்கனியைத் தந்தருளினார். அதனைக் கணவன் கையில் கொடுத்த மாத்திரத்தில் மாயமாய் மறைந்தது. அக்கணமே அவர் சிந்தையில் இவர் பெண் அன்று; பேரருள் புரியும் பெருந்தெய்வம் எனஎண்ணினார் பரமதத்தன். இனி இவருடன் வாழ்தல் தகாவென்று மனத்தினுள் கருதி, கடல் மேல் கப்பலில் சென்று பெருஞ்செல்வம் கொணர்வேண் எனக் கூற சுற்றத்தார் அனுப்பி வைத்த தனை,

'படு திரைப் பரவை மீது படர் கலங்கொண்டு போகி

நெடுநிதி கொணர்வேன்' எனக்கூறி சென்றான் பரமத்ததன்.

'செழுமணம் பின்பு செய்த

பெந்தொடி தனையுங் கொண்டு பயந்த பென் மகவினோடு

முந்துறச் செல்வேன்' *(காரைக்காலம்மையார் புராணம், 43 வதுபாடல்.)*

கடல்கடந்து சென்று பெருஞ்செல்வம் ஈட்டி பாண்டிய நாடு மீண்டு வேரொரு பெண்ணை மணந்து அவர்க்குப் பிறந்த குழந்தைக்குப் புனிதவதி எனப்பெயர் வைத்து வாழ்ந்து வந்த காலை, வியாபார செய்ய பாண்டிய நாடு சென்றோர் அவர் மனைவியோடு வாழும் செய்தியினைப் அம்மையாரிடம் கூற, சுற்றத்தார் அம்மையாரை அவர் பால்கொண்டு விடசென்ற பொழுது, கணவனான பரமதத்தன் தம் மனைவி பிள்ளையோடு அவர் தம் திருவடிகளில் வணங்கியதைக் கண்ட புனிதவதி சுற்றத்தாரோடு அஞ்சி ஒதுங்கி நின்றார், சுற்றத்தார் வெட்கமடைந்து, மணம் மிக்க மாலையை அணிந்த நீ உன் மனைவியை வணங்குவது ஏன் என வினவ,

'உன் திரு மனைவி தன்னை மணமலிதாரினாய்! நீ

வணங்குவ தென்கொல்' என்றனர் பாடல் 45.

'மானுடர் இவர் தாமல்லர்

நற்பெருந் தெய்வமாதல் நான்றிந்தகன்ற பின்பு

பெற்ற இம்மகவு நன்னைப் பேரிட்டேன் ...'

பேய் வடிவம் பெற்ற அன்னையைப் போற்றுதல்

'மலர் மழைப் பொழிந்த்தெங்கும் வான துந்துபியின் நாதம்

உலகெலாம் நிறைந்து விம்மும் கரும் முனிவரும்

குலவினர்கணங்கள் எல்லாங் குணலையிட்டன முன் நின்ற

தொலைவில் பல் சுற்றத்தாருந் தொழுதஞ்சி அகன்று போனார்' *(காரைக்காலம்மையார் புராணம் பாடல் 50.)*

உமையம்மை அதிசயித்து தம் தலைவனான சிவபொருமானைப் பார்த்துத் தலையால் நடந்து மலைமீது ஏறி வரும் அன்பு தான் என்னே! என வினவ.

தலையினால் நடந்திங்கேறும்

எம்பொருமானோர் எற்பின் யாக்கை அன்பென்னே! (காரைக்காலம்மையார் புராணம் பாடல் 56)

என வினவ,

'வருமிவள் நம்மைப் பேணும் அம்மை காண் உமையே மற்றிப்

பெருமை சேர் வடிவம் வேண்டிப் பெற்றனள்' என்று பின்றை

அருகு வந்தனைய நோக்கி 'அம்மையே! என்னஞ் செம்மை

ஒருமொழி உலகமெல்லாம் உய்யவே அருளிச் செய்தார்'(காரைக்காலம்மையார் புராணம் பாடல்57 58)

அங்கணன் அம்மையே என்னருள் செய 'அப்பா' என்று

பங்கயச் செம்பொற் பாதம் பணிந்து வாழ்ந்தெழுந்தார் தம்மைச்

சங்க வெண்குழையினாருந்தாமெதிர் நோக்கி 'நம்பால்

இங்கு வண்டுவதென்' என்ன இறைஞ்சி நின்றியம்புகின்றார்.(காரைக்காலம்மையார் புராணம் பாடல் 58)

சிவனடியார் அடியின் கீழிருக்கும் பேற்றை அருளி வணங்குவோர்க்குப் பற்றுக் கோடாய் நிற்கும் இறைவர் பழையனூர் எனும் பதியில் நிலவும் திருவாலங்காட்டில் நாம் ஆடும் கூத்டினைக் கண்டு எப்போதும் மகிழ்ச்சியாய் பாடிக்கொண்டிருப்பாயாக என அருளினமையைக் கொண்டு,

'குலவு தென் திசையில் என்றும்

நீடு வாழ் பழன மூதூர் நிலவிய ஆலங் காட்டில்

ஆடுமாநடமும் நீ கண்டானந்தஞ் சேர்ந்தெப் போடும்

பாடுவாய் நம்மை' *(காரைக்காலம்மையார் புராணம் பாடல் 60)*

மேலண்டங்களில் பொருந்த திருவடியைத் தூக்கி ஆடும் கூத்தினைக் காணப் பெற்று *'கொங்கை திரங்கி' பாடல் 62,* எனத்தொடங்கும் மூத்தத் திருப்பதிகம் பாடினார். மனம் மகிழும் கொன்றை மலர் மாலை சூடிய இறைவனின் கூத்தை மேலும் மேலும் காண விரும்பி வியப்படைந்து

'எட்டி இலவம் மீகை'... எனத் தொடங்கி 'கெட்ட முழவம் குழகன் ஆடும்' *பாடல் 63,*

எனும் திருப்பதிகத்தைப் பாடி வியந்தார்.

"அறுபத்து மூன்று நாயன்மாருள் மகளிர் மூவரே என்பது ஏற்கெனவே கூறப்பெற்றது. அம்மூவர் காரைக்காலம்மையார், நின்றசீர் நெடுமாறன் மனைவியாகிய மங்கையர்க்கரசியார், சுந்தரர் தாயார் இசை ஞானியார் ஆகியோராவர்." (மா. இராச மாணிக்கனார், சைவ சமய வளர்ச்சி, பக்.197-198) '.... திருநாவுக்கரசர் சகோதரியாராகிய திலகவதி- யாராலும், மங்கையர்க்கரசியாராலும் தமிழகத்தில் சைவ

சமயம் தழைத்தது. நாயன்மார் மனைவியரின் ஒத்துழைப்பால் வளர்ச்சி பெற்றது. செம்பியன்- மாதேவி போன்ற அரசமாதேவியர் ஆலயத் திருப்பணியால் மலர்ச்சியுற்றது. தேவரடியாராக மகளிர் ஆலயத்தில் ஆடிப்பாடி இறைபணி புரிந்துள்ளனர்! கோவிலுக்கே தங்களை அடிமையாக்கிக் கொண்டு திருப்பணி செய்துள்ளனர்." *(கே.கே.பிள்ளை, தமிழக வரலாறு - மக்களும் பண்பாடும்; பக்.317-319)* ஆனால், காரைக்காலம்மையாரோ இளமை முதற்கொண்டு இறைவனையே நினைந்து நெக்குருகி அவனருளைப் பாடி அவனருள் பெற்று வீடுபேறு பெற்ற பெற்ற பெருந்தகையாளராவார். மனவாழ்வினூடேயும், (தளிரடி மென்னகை மயிலைத் தாதவிழ் தார்க் காளைக்குக் களிமகழ்சுற் கலியாணம் செய்தார்கள் (பெரிய. காரை : 1) என்று நயமுறப் பாடியுள்ளார் சேக்கிழார். *(இ.கே. சுப்பிரமணிய முதலியார் (உரை) பெரிய புராணம்; ப.851.)* பக்தியினை மறவாது சிவயெறியினைப் போற்றிப் புரந்தவர் அம்மையாராவார்.

**ஆய்வின் முடிவுகள்**

1. சைவ சமயத்தின் முன்னோடி, சைவ பெண்ணடியார் மூவருள் முதன்மையர்
2. சிவனருள் பெற்று வீடுபேறு பெற்ற பெருந்தகையள்
3. காரைக்காலில் கோயில் கொண்டு வழிபடும் தெய்வமாகக் காட்சியளிப்பவள். அதோடு மாங்கனி விழா, பக்திக்கோர் விழா என்பதனை உலகிற்கு உணர்த்திக் கொண்டிருக்கும் ஒப்புயர்வற்ற சிவதொண்டர்.
4. பிறப்பு முதல் பிறவாமை வேண்டியது வரை சிவனடியின் கீழிருக்கும் சீர்தொண்டர் இவர்
5. அந்தாதி இலக்கிய வகைமையினைத் தமிழுக்கு யாத்துத் தந்தவர்,
6. பெண்களால் இல்லறவாழ்வு துறந்து இறைநெறியில் பக்தி செலுத்தி முக்கியும் அடைய முடியுமென உலகிற்கு உணர்த்தியவர்

ஆகியன காரைக்காலம்மையார் வாழ்வினூடாக இக்கட்டுரை வெளிப்படுத்துகிறது.

**ஆய்வுக்குப் பயன் பட்ட நூல்கள்.**

1. டாக்டர் ஜனகா சுந்தரம், 'காரைக்கால் அம்மையார் வாழ்வும் இலக்கியமும்'
ராஜேஸ்வரி புத்தக நிலையம்,
22, 6வது தெரு, பக்தவச்சலம் நகர், பழவந்தாங்கல், சென்னை-114.
முதல் பதிப்பு-நவம்பர்-1996.
2. டாகடர் (திருமதி) எம்.எஸ். சாந்தா.,'கன்னடத்தில் காலைக்காலம்மையார் வரலாறு',
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சிஐடி வளாகம், தரமணி, சென்னை-113,வெளியீடு-1997.
3. மா. இராச மாணிக்கனார், 'சைவ சமய வளர்ச்சி'.
4. கே.கே. பிள்ளை, 'தமிழக வரலாறு - மக்களும் பண்பாடும்'.
5. இ.கே. சுப்பிரமணிய முதலியார் (உரை) 'பெரிய புராணம்'.